# புகை மூட்டம்

விடியற்காலை ஐந்து மணி. அலாரம் அடித்தது. எல்லோரையும்போல் இல்லாமல் இன்முகத்தோடு எழுந்தாள் இனியாள். கடந்த நான்கு வருடமாக பழகிவிட்டது இந்த வாழ்க்கை அவளுக்கு.

சன்னலைத் திறந்தாள். வெளியெ ஒரே புகை மூட்டமாக இருந்தது. படாரென்று கதவைச் சாத்திவிட்டு "ஏன்தான் இந்த இந்தனோசியாவில் இப்படி வருசா வருசம் காட்டை எரிக்கிறார்களோ தெரியலை? என்றாள். அவள் புலம்புவதற்கும் காரணம் இருக்கிறது. அவளுக்கோ ஆஸ்த்மா. ஆகையால் புகை அவளுக்கு என்றுமே பகையாகத்தான் தெரியும்.

குளித்தாள்; முடித்தாள்; நடந்தாள்; ஓடினாள்; நிறுத்தினாள்; ஏறினாள்; நின்றாள்.

"தயவு செய்து எல்லோரும் பேருந்தின் பின்புறம் நகரவும்" என பேருந்து ஓட்டுநர் அறிவிப்பு செய்தார். கூட்டம் கொஞ்சம் நகர்ந்தது உள்ளே. புகைமூட்டம் மிகவும் அதிகமாக தெரிந்தது. எதிரில் வரும் வாகனங்களோ சரியாகத் தெரியவில்லை. காற்றின் தூய்மைக்கேட்டுக்குறியீடு 400ஐ தாண்டியிருந்தது. இனியாள் கைப்பையில் வைத்திருந்த அந்த மருந்ததை தனது மூக்கில் இழுத்துக்கொண்டாள்.

உட்லண்ட்சிலிருந்து ராபில்ஸ் பிளேசுக்கு வருவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது அவளுக்கு. வேகவேகமாகப் பேருந்தைவிட்டிறங்கி அலுவலகத்திற்குச்செல்ல சாலைச்சந்திப்பில் பச்சைமனிதனுக்காக காத்திருந்தாள். அவளுக்கெதிரே பேருந்துகளும், லாரிகளும், மோட்டார் சைக்கிள்களும் அவளைவிட வேகமாக கடந்துகொண்டிருந்தன.

"க்ரீ.....ச் " என பிரேக் அடிக்கும் சத்தமும் "அம்...ம....ா..." என அலறும் சத்தமும் ஒன்றாய் கேட்டது. திடுக்கிட்டு திரும்பினாள்.

பச்சை மனிதன் சாலையைக் கடக்க சைகை செய்தான். ஒவ்வொருவரும் அந்த அலறல் வந்த திசை பார்த்து " ஓ மை காட் . ஆ...வ்" என அலறிக்கொண்டே சாலை விதிகளுக்கு மதிப்பளித்து சாலையைக் கடந்துகொண்டிருந்தனர்.

இனியாளுக்கு ஏனோ கால்கள் நடுங்கியது. யாருக்கு என்ன ஆச்சோ தெரியலையே என அந்த இடம் நோக்கி ஓடினாள். அங்கே ஒரு வயதான மாது அவரை இடித்த டாக்சிக்கு முன்னே அட்டைப்பூச்சியாய் சுருண்டு முனகிக்கொண்டிருந்தார். மூக்கிலிருந்து ரத்தம் முட்டையாகி உடைந்துகொண்டிருந்தது.

டாக்சி ஓட்டுநர் யாருக்கோ தனது கைத்தொலைபேசியில் பேசிவிட்டு "இந்த அம்மா உனக்கு சொந்தமா?" எனக் கேட்டார்.

"இல்லை" என்றாள்

"அப்புறம் ஏன் நீ நிற்கிறாய். நீ கிளம்பு" என்றார்.

"என்ன கொடுமை ஒருவருக்கு உதவி செய்வதற்கு உறவினராகமட்டுமே இருக்கவேண்டுமா என்ன?" என தனக்குள்ளே பேசிக்கொண்டாள்.

"இல்லை அங்கிள். ஆபத்தில் இருக்கும்போது எல்லோரும் எனக்குச் சொந்தம்தான்! நீங்கள் உட்பட" என்றாள் சற்று கோபமாக.

இதற்கிடையில் சாலையில் செல்கின்ற மற்ற வாகனங்கள் சற்று வேகம் குறைத்து என்ன என கதவோரக்கண்ணாடியை இறக்கிப் பார்த்துக்கொண்டே மெதுவாய் நகர, அதன் பின்னால் வரும் வாகனங்கள் ஒலி எழுப்பி வேகத்தைக்கூட்டி விரைவாக நகர்ந்தன.

திடீரென்று அந்த மாது இனியாளை நோக்கி சைகை செய்வதை கவனித்தாள் அவளால் பேசமுடியவில்லையென்றாலும் முனகிக்கொண்டே கழுத்தில் மாட்டியிருந்த ஒரு குறிப்புத்தாளைக் காட்டி சைகை செய்தாள். அதை எடுக்கக் குனிந்தாள் இனியாள்.

"அவளைத்தொடாதே?" என சத்தம் வர திரும்பிப்பார்த்தாள்.

டாக்கி ஓட்டுநர் "ஆம்புலென்ஸ் வரும் வரைக்கும் அவரைத்தொடாதே? நான் ஏற்கனேவே ஆம்புலேன்ஸிற்கு தகவல் சொல்லிவிட்டேன் விரைவில் வந்துவிடும்" என்றார்.

அவள் அதை பொருட்ப்படுத்தாது அந்த குறிப்பைப் படித்தாள். அதில் அவர் பெயரும், அவசர உதவிக்கு இரண்டு கைபேசி எண்களும் இருந்தன. அவசரமாக அந்த முதல் எண்ணிற்கு தகவல் சொல்வதற்காக அழைத்தாள். அதற்குள் இனியாவின் கைபேசி சிணுங்கியது. ஒரு வாரத்திற்குமுன் திருமணம் செய்துகொண்ட கணவன்தான் அழைத்தான்.

"ஹனி!" என்றான்.

"டியர் இங்கே ஒரு விபத்து நான் உங்களை திரும்ப அழைக்கிறேன்" என்றாள்.

"யாருக்கு? என்னாச்சு?" எனப் பதறினான் அவன்.

"எனக்கு ஒன்றுமில்லை. யாரோ ஒரு மாதுக்கு அடிபட்டிடுச்சு நான் உதவிக்கொண்டிருக்கிறேன்" என்றாள்.

"ஏற்கனவே உனக்கு ஆஸ்த்மா, புகை மூட்டம் வேறு அதிகமா இருக்கு, புகை உனக்கு பகைன்னு மருத்துவர் சொல்லிருக்கார் ஞாபகம் வச்சுக்கோ! சீக்கிரம் அலுவலத்திற்கு போ" என்றான். "சரி" என்று கூறிவிட்டு தகவல்சொல்ல அந்த மாதின் மகளுக்கு மீண்டும் அழைத்தாள். நீண்ட நேரம் மணியடித்து ஓய்ந்தது. யாரும் எடுக்கவில்லை.

மறுபடியும் அந்த மாதை நோக்கினாள். உடலில் அசைவில்லை. "இறந்திருப்பாரோ?" கண்களில் நீர் அருவியாகக் கொட்டியது இனியாவிற்கு. எல்லாவற்றையும் உயிர் என நினைக்கும் நல்ல உள்ளங்களால் மட்டும்தான் கண்ணீரை அறிமுகமற்றவருக்காவும் சிந்த முடியும்.

ஒரு பள்ளி மாணவி தனது தாயுடன் சாலையைக் கடக்கக் காத்திருந்தாள். "அங்கே என்னம்மா ஒரு டாக்சி சாலையில் நிற்கிறது" என்றாள். "ஏதோ விபத்து மாதிரி இருக்கு. நீ முதலில் சாலையைக் கடந்து பள்ளிக்குச் செல்லும் வேலையைப் பார்" என்றாள் அவள் தாய்.

அடுத்த சில நிமிடங்களில் இனியாவின் கைபேசி ஒலித்தது. ஏதோ புதிய எண். "யார் என்று தெரியவில்லையே? எனச் சொல்லிக்கொண்டே பேசினாள்.

"யாருங்க போன் அடித்தது?" எதிர் முனையில் ஆங்கிலத்தில்.

"நான் தான் இனியாள்" என்றால் ஆங்கிலத்தில்.

"என்ன விசயம்? கிரெடிட் கார்டா? எனக்கு தேவையில்லை"

"இல்லை உங்கள் அம்மா..."

"அம்மா அப்பாயிண்ட்மெண்ட்டா? வாங்கியாச்சு இந்நேரம் வங்கிக்குப் போயிருப்பாங்களே! என்ன விசயம் சீக்கிரம் சொல்லுங்கள்" என்றது எதிர்முனை.

"அதெல்லாம் இல்லைங்க உங்க அம்மா விபத்தில் சிக்கி ரொம்ப ஆபத்தான நிலைமையில இருக்காங்க. அதைச் சொல்லத்தான் அழைத்தேன் என்றாள். இனியாள் இருமலுடன் விபரத்தைப் பகிர்ந்துகொண்டாள்.

ஆம்புலென்ஸ் வந்து முதலுதவியை ஆரம்பித்தார்கள். சற்று முன் என்ன என்று கேட்ட மாணவியின் தாய்தான் எதிர்முனையிலும் அவளின் பாட்டிதான் விபத்தில் மாட்டிக்கொண்டவர் என்பதையும் தெரிந்துகொண்டாள் கைபேசி உரையாடலில். தற்பொழுது இனியாள் புகையின் தாக்கத்தால்

மூச்சுவிட மிகவும் சிரமப்பட்டாள்.  "நானும் இந்த விபத்தை பார்த்தும் மற்றவர்போல் பார்க்காமல் போயிருக்கலாமோ?" என ஒரு நொடி நினைத்தாள்.  இவளுக்கு மயக்கம் வருவதுபோல இருந்தது.

ஆம்புலென்ஸ் கிளம்பியது.  இனியாளும் அதில் ஏறிக்கொண்டாள்.  "கடவுளே இவரை எப்படியாவது காப்பாற்று!" என வேண்டிக்கொண்டே முதலுதவி அதிகாரியை கேட்டாள்.

"எப்படி இருக்காங்க"

"இதயத்துடிப்பு இருக்கு.  ஆனால் இப்பொழுது எதுவும் சொல்ல முடியாது" என்றார்.

"அவசர சிகிச்கைச்கும் வெகுநேரம் காத்திருக்கனும்னு சொல்றாங்களே? பிழைச்சுக்குவாங்களா?" என்றாள்.

"ஆபத்தின் தன்மையைப் பொறுத்து காத்திருப்பு நேரம் மாறும். ஆனால் இந்த மாதிற்கு மிக அவசரநிலை சிகிச்சை தேவைப்படுவதால் உடனடி சிகிச்சை நடக்கும்" என்றார்.

மருத்துவனையை நெருங்க நெருங்க இனியாளுக்கு மூச்சுவிட சிரமம் அதிகமாயிற்று.  இருமலும் அதிகமானது.  மறுபடியும் ஒருமுறை மருந்தெடுத்து மூக்கில் அடித்துக்கொண்டாள்.

தீவிர சிகிச்கைப்பிரிவின் வாசலில் உள்ள வரிசையான நாற்காலியில் அமர்ந்து சிரமப்பட்டு மூச்சுவிட்டுக்கொண்டிருந்தாள்.

ஒரு மணி நேரம் கடந்தது.  அடிபட்ட மாதின் மகளிடம் மருத்துவர் சொன்னார் "நாங்கள் எவ்வளவோ முயற்சிசெய்தும் தன்னம்பிக்கை அதிகமிருந்ததால் உங்கள் தாயார் பிழைத்தார்" என்றார்.

"நன்றி கடவுளே" என்றாள்.  அவளுக்கு இனியாளின் ஞாபகம் வந்தது.

இனியாளின் கைபேசிக்கு அழைத்தாள் நன்றி சொல்ல.

இனியாளின் கைபேசி சினுங்கி தான் உயிரோடிருப்பதைக் கூறியது.

ஆனால் இனியா உயிரற்று சாய்ந்திருப்பதை அதனால் கூறமுடியவில்லை.

**மொத்த வார்த்தைகள் : 4872**